Sr

# ஸ்கைப் 101 மூத்த குடிமக்களுக்காக

# ஸ்கைப் மூத்த குடிமக்களுக்காக

ஸ்கைப் வீடியோ அழைப்புக்கள் 50 பேர் வரையிலான மக்கள் சந்தித்து, ஒரே சமயத்தில் அனைவரும் அளவளாவும் வகையில் அழைப்புக்களை எளிதாக்குகிறது மற்றும் ஸ்கைப்-லிருந்து-ஸ்கைப்புக்கு குரல் அழைப்புக்கள் மற்றும் வீடியோ அழைப்புக்கள் இலவசமானவையாகும். எப்படி பதிவிறக்கி, ஸ்கைப் ஊடாக உலா வருவது மற்றும் பயன்படுத்துவது என்பதற்கான படிப்படியான வழிகாட்டுதல்கள் இதோ:

# படி 1

## ஸ்கைப் – ஐ பதிவிறக்கவும்

நீங்கள் பதிவிறக்க உத்தேசம் கொண்ட சாதனத்தைப் பொருத்து, ஸ்கைப்-இன் ஒரு குறிப்பிட்ட பதிப்பை நீங்கள் பதிவிறக்கம் செய்வது அவசியம். மூத்தகுடிமக்கள் பொருத்தவரை ஸ்கைப்-ஐ ஐ-பேட், ஆண்ட்ராய்டு டேப்லெட் அல்லது கணினியில் அமைத்துக்கொள்வது பரிந்துரைக்கப்படுகிறது; ஏனெனில் மொபைல் கைப்பேசிகள் சிறிதாக இருப்பதுடன் இதர சாதனங்களின் அளவுக்கு உரத்த ஒலி இருக்காது.


குறிப்பு:ஒரு சாதனத்தை நீங்கள் தெரிவு செய்யும்போது, அதில் வீடியோ மற்றும் மைக்ரோஃபோன் இருப்பதை உறுதி செய்து கொள்ளவும்.

உங்களுடைய

**மடிக்கணினி/டெஸ்க்-டாப் கணினியில்**
பதிவிறக்கம் செய்ய:
இந்த லின்குகள் ஒன்றை க்ளிக் செய்க:

- விண்டோஸ்-க்கான ஸ்கைப்
- Mac – ற்கான ஸ்கைப்

கீழிறங்கி விரியும் பட்டியலில் இருந்து நீங்கள் உபயோகிக்கும் கணினி அமைப்பை தேர்ந்தெடுக்கவும்




# ஸ்கைப் மூத்த குடிமக்களுக்காக

உங்களுடைய

மொபைல் தொலைபேசி யில் (ஆண்ட்ராய்ட் மற்றும் ஐ-ஃபோன்) பதிவிறக்கம் செய்ய:

**இந்த லின்க்-ஐ க்ளிக் செய்யவும்:**

**மொபைல் –க்கான ஸ்கைப்**




உங்களிடம் இருக்கின்ற மொபைல் சாதன வகையைப் பொருத்து சம்பந்தப்பட்ட ஆப் ஸ்டோர்-ஐ தேர்வு செய்யவும்:
ஆண்ட்ராய்ட்-க்கு கூகிள் ப்ளே
ஐ-ஃபோன் –க்கு ஆப் ஸ்டோர்

டேப்லெட் (ஆண்ட்ராய்ட் மற்றும் ஐ-ஃபோன்)

**இந்த லின்க்-ஐ க்ளிக் செய்யவும்:**


**டேப்லெட் –க்கான ஸ்கைப்**





கீழிறங்கி விரியும் பட்டியலில் இருந்து நீங்கள் உபயோகிக்கும் டேப்லெட் வகையை தேர்ந்தெடுக்கவும்.

# Sr படி 2

## ஸ்கைப்-ற்காக ஒரு இலவச கணக்கு உருவாக்கவும்




இந்த ஆப் உங்கள் சாதனத்தில் பதிவிறக்கம் ஆனவுடன், அதுவே உங்கள் கணக்கைத் துவக்குவதற்கான சரியான நேரமாகும். ஸ்கைப் – ற்காக ஒரு புதிய கணக்கை உருவாக்க இந்த லின்க்-இல் க்ளிக் செய்யவும்: இலவச கணக்கை உருவாக்கவும்

ஒரு மின்னஞ்சல் முகவரி அல்லது ஒரு தொலைபேசி எண் உபயோகித்து ஒரு ஸ்கைப் கணக்கிற்காக பதிவு செய்து கொள்ளலாம். உங்களிடம் ஒரு மின்னஞ்சல் முகவரி இல்லை என்றாலும் கூட அதைப் பெறுவதற்கு "புதிய ஒரு மின்னஞ்சல் முகவரி பெறுக" என்பதை க்ளிக் செய்து இன்னும் சில படிகளைப் பின்பற்றவும். அப்படி இல்லையென்றால், தொலைபேசி எண்ணுக்கான விருப்பத்தெரிவு செய்து கொள்ளலாம்.

அடுத்து வரும் திரைகள் உங்கள் தனிநபர் தகவல்களாகிய, பெயர், வயது மற்றும் அமைவிடத்தைக் கேட்கும். வேண்டிய தகவல்களை உள்ளீடு செய்து க்ளிக் செய்து தொடரவும்.

சொந்தமான மற்றும் தனித்துவமான ஒரு கடவுச்சொல் தேர்ந்தெடுப்பது முக்கியம். சுலபமாக யூகித்துவிட முடியாத கடவுச்சொல் தேர்ந்தெடுப்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளவும்.

நிஜமான ஒரு கணக்குதான் அமைக்கப்படுகிறதா என்று உறுதி செய்துகொள்வதற்காக, சில சமயங்களில், ஸ்கைப் மென்பொருளானது, பயனரை சோதனை செய்யும். இதைச் செய்வதற்கு, திரையில் காட்டப்படும் ஒரு வார்த்தை அல்லது படத்தை உள்ளீடு செய்யுமாறு கேட்கலாம். இதற்குப் பெயர் கேப்ட்ச்சா மற்றும் இதைச் செய்தே ஆக வேண்டும். கேப்ட்ச்சா குறியீடு ஒன்றை கேட்டால் அதை உள்ளீடு செய்து, "கணக்கை உருவாக்குக" என்பதை க்ளிக் செய்யவும்


இப்போது உங்களுக்கு செயல்படக்கூடிய ஒரு கணக்கு ஏற்பட்டுவிட்டது. ஸ்கைப்-இன் அந்தரங்கம் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் பற்றிய மேலும் தகவல்களுக்கு இங்கு வருகை புரியவும்:

https://support.skype.com/fr/skype/all/privacy-security/privacy-settings/

Sr


# படி 3

## ஸ்கைப்-இல் உள்நுழைதல்










உங்களுக்கென நீங்கள் தேர்வு செய்த ஒரு ஸ்கைப் பெயரை, அதாவது உங்கள் மின்னஞ்சல் முகவரி அல்லது தொலைபேசி எண் (உங்கள் கணக்கை பதிவு செய்த விதம் பொருத்து) உபயோகித்து, நீங்கள் ஸ்கைப்-இல் நுழையலாம்.

உங்களிடம் ஏற்கெனவே ஒரு ஸ்கைப் அல்லது மைக்ரோஸாஃப்ட் கணக்கு இருந்தால்:


**1** ஸ்கைப்-ஐத் திறந்து, ஸ்கைப் பெயர், மின்னஞ்சல் அல்லது தொலைபேசி எண் க்ளிக் செய்யவும்

**2** உங்கள் ஸ்கைப் பெயர், மின்னஞ்சல் முகவரி அல்லது தொலைபெசி எண் உள்ளீடு செய்து "அடுத்து" என்பதை க்ளிக் செய்யவும்.

**3** உங்கள் கடவுச்சொல்லை உள்ளீடு செய்து தொடரவும் எனும் அம்புக்குறியை தேர்ந்தெடுக்கவும். இப்போது நீங்கள் ஸ்கைப்-இல் உள் வந்துவிட்டீர்கள்.

**குறிப்பு:** நீங்கள் உள் நுழைந்தவுடன், ஸ்கைப் உங்கள் உள் நுழைதல் தகவல்களை நினைவில் வைத்துக்கொள்ளும்; நீங்கள் ஸ்கைப்-ஐ விட்டு வெளியேறும்போது அல்லது ஸ்கைப்-ஐ மூடும்போது, உங்கள் கணக்கு தகவல்களை நினைவில் வைத்துக்கொள்ளவும்


ஸ்கைப்-இன் பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல் எனும்போது, உங்களால் எளிதில் நினைவுகொள்ளும் வகையிலான பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லை உபயோகிக்கவும். உங்கள் பயனர் பெயரை உங்கள் கிளப் உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்ளவும்; இதனால் அவர்கள் உங்கள் அழைப்புக்களை பெறத் தயாராகி உங்களுடன் இணைந்துகொள்ள முடியும்.




நீங்கள் உங்கள் ஸ்கைப் பெயரை கொடுத்த பின்னர், உங்கள் கிளப் உறுப்பினர்களிடம் அவர்களின் பயனர் பெயர்களைக் கேட்டுப்பெறவும். ஸ்கைப் –இல் நீங்கள் நுழைந்த பின்னர், அதில் வலது அடிப்புறம் "தொடர்புகள்" எனும் உருவகத்தை க்ளிக் செய்து, அதன் பின்னர் வலது மேற்புறத்தில் இருக்கும் "தொடர்புகளைச் சேர்க்கவும்" எனும் பொத்தானைத் தட்டவும்.


# Sr படி 4

## ஒரு குழுவை அமைத்தல்





குழு அரட்டை ஒன்றைத் துவக்குவதற்கு, நீங்கள் ஒரு குழுவை உருவாக்க வேண்டும். பல பயனர்களுக்கு இடையில் "கான்ஃபரன்ஸ் அழைப்புக்கள்" செய்ய இந்தக் குழுவை உபயோகித்துக்கொள்ளலாம். (உதாரணத்திற்கு: உங்கள் க்ளப் உறுப்பினர்கள்)

ஸ்கைப் ஜன்னலில் இடதுபுறம் இருக்கின்ற தொடர்புகள் பட்டியலில் இருந்து நீங்கள் விரும்பும் பயனர்களில் ஒருவரை க்ளிக் செய்து உங்கள் குழுவில் சேர்த்துக் கொள்ளலாம். பிறகு வலது மேல்புற மூலையில் இருக்கின்ற “ **நபர்களைச் சேர்க்கவும்** ” என்பதை தேர்ந்தெடுக்கவும்




இடதுபுறம் இருக்கின்ற தொடர்புகள் பட்டியலில் இருந்து நீங்கள் விரும்பும் தொடர்புகளைத் தேர்ந்தெடுத்து பிறகு ‘**தேர்ந்தெடுக்கவும்**’ என்பதை க்ளிக் செய்யவும்.





திரையில் வலப்புறம் இருக்கின்ற “**இந்தக் குழுவில் இருப்பவர்கள்**” எனும் பெட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனர்கள், தோன்றுவார்கள். அனைத்து உறுப்பினர்களையும் நீங்கள் சேர்த்த பின்னர், “**சேர்க்கவும்**” என்பதை க்ளிக் செய்து முடிக்கவும்.


Sr

படி 4 தொடர்ச்சி....

## தொடர்புகள் பட்டியலில் குழு பெயரை சேர்த்துக்கொள்ளுதல்




குழு அரட்டை ஜன்னலிலிருக்கும் **"தொடர்புகளில் குழுவைச் சேமிக்கவும்"** எனும் உருவகத்தை க்ளிக் செய்யவும்.




குழுவிற்கு ஒரு பெயர் உள்ளீடு செய்து **"ஓகே"** யை க்ளிக் செய்யவும்.

இந்தப்புதிய குழு உங்கள் தொடர்புகள் பட்டியலில் சேர்க்கப்பட்டு, திரையில் இடதுபுறத்திலும் புதுப்பிக்கப்படும்


Sr

# படி 5

## உங்கள் அழைப்பு வகையைத் தேர்ந்தெடுக்கவும்

உங்கள் தொடர்புகள் பட்டியலை உருவாக்கிய பின்னர், உங்கள் முதலாவது ஸ்கைப் அழைப்பை செய்ய நீங்கள் தயார் ஆகிவிட்டீர்கள்.

உறுப்பினர்/குழு பெயரை க்ளிக் செய்வதன் மூலம் கிளப் உறுப்பினர் அல்லது புதிதாக உருவாக்கிய குழுவை தேர்ந்தெடுத்து ஒரு அழைப்பு விடுக்கலாம்.




என்ன வகையான அழைப்பை நீங்கள் செய்வது என நீங்கள் முடிவு செய்ய வரிசையான பொத்தான்களை நீங்கள் காண்பீர்கள். இவற்றில் ஒன்றை நீங்கள் தேர்வு செய்யலாம்:

**வீடியோ அழைப்புக்கள்:** நேருக்கு நேராக முகம் கொடுத்து பேச விரும்பினால், வீடியோ பொத்தானை க்ளிக் செய்யவும்.

**தொலைபேசி அழைப்புக்கள்:** வெப் கேமிரா இல்லாமல் ஒரு அழைப்பு செய்ய விரும்பினால் தொலைபேசி பொத்தானை க்ளிக் செய்யவும்.


இணைப்பு நன்றாக இருந்தால், நீங்கள் அழைத்த உறுப்பினரின் படம் முழுத்திரையிலும் உங்கள் சொந்தப் படம் வலது கீழ்ப்புற மூலையிலும் இருப்பதை நீங்கள் காணலாம்.

**நீங்கள் இணைக்கப்பட்டுவிட்டீர்கள். இப்போது நீங்கள் விரும்பும் நேரம் வரை பேசிக்கொண்டே இருக்கலாம்.**

# Sr படி 6


## அழைப்பை முடித்தல்

நீங்கள் அழைப்பை முடித்தவுடன், உரையாடலை முடிக்க சிகப்பு நிற தொலைபேசி கைப்பிடி சின்னத்தை அழுத்தினால் போதும்.



# Sr ஸ்கைப் குறிப்புகள் மற்றும் தந்திரங்கள்

## ஸ்கைப் பற்றி தெரிந்துகொள்ளுதல்




அ **சுயவிபரம்:** உங்கள் அமைப்புகளுக்கு சென்று உங்களைப் பற்றி விபரம் பதிவு செய்துகொள்ளவும்.

ஆ **மேலும்:** உங்கள் அமைப்புகளுக்கு சென்று உதவி கேட்கவும், பின்னூட்டம் கொடுக்கவும் அல்லது ஸ்கைப் இல் இருந்து வெளியேறவும்

இ **அரட்டைகள்:** உங்களுக்கான அரட்டைகளை, விருப்பமானவைகளை விரைவில் கண்டுபிடிக்கவும்

ஈ **அழைப்புக்கள்:** நேருக்கு நேர் அல்லது குழு அழைப்புகள் செய்யவும்

உ **தொடர்புகள்:** உங்கள் தொடர்புகளுக்குள் சென்று தேடவும், யார் செயல்பாட்டில் இருக்கிறார் எனப் பார்க்கவும் அல்லது ஸ்கைப் இல் யாரையேனும் அழைக்கவும்

ஊ **அறிவிப்புக்கள்:** அமைத்துக்கொள்ளவும்;இதனால் தவறவிட்ட அரட்டைகளைப் பற்றி அறியவும் (சுயவிபரம், அமைப்புகள், அறிவிப்புகள் ஆகியவற்றில் க்ளிக் செய்யவும்)

எ **இப்போது சந்திக்கவும்:** நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் ஸ்கைப் இல் இருக்கவில்லை என்றாலும் கூட அவர்களுடன் பேசி உடனடியாக ஒரு குழு ஏற்படுத்தவும்.

ஏ **புதிய அரட்டை:** புதியதொரு நேருக்கு நேர் அல்லது குழுவுடனான தனிப்பட்ட உரையாடலைத் துவக்கவும்

ஐ **அரட்டைகளை வகை பிரிக்கவும்: அனுப்பிய நேரம் அல்லது** இன்னும் படிக்காத செய்திகள் வகையில் உங்கள் அரட்டைகளை வகை பிரித்துக் கொள்ளவும்

### மேற்கோள்கள்

https://support.skype.com/fr/faq/FA11098/que-dois-je-faire-pour-commencer-a-utiliser-skype
https://www.Skype-lab.com/en/guide/chat/group-im.html